**பொத்துவில் பிரதேச சபை - 2022**

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

பொத்துவில் பிரதேச சபையின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ஐந்தொகை, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான வருமானங்கள் மற்றும் செலவுகள் கணக்கு, காசுப்பாய்ச்சல் கூற்று, முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் ஏனைய விளக்கமளித்தல் தகவல்களின் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2022 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை அதிகாரச் சட்டத்தின் 172(1) ஆம் உப பிரிவு மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்திலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையில் உள்ளடக்கப்பட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் தரப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களின் தாக்கங்களைத் தவிர்த்து, நிதிக்கூற்றுக்கள் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பொத்துவில் பிரதேச சபையின் நிதிநிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதன் நிதிச் செயலாற்றல் மற்றும் காசுப்பாய்ச்சல் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்படும் கணக்கீட்டு நடைமுறைகளுக்கு இணங்க உண்மையாக மற்றும் நியாயமாக வெளிப்படுத்துகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களை அடிப்படையாகக் கொண்டு எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க என்னால் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டது. இக்கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்பு, இந்த அறிக்கையின் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு சம்பந்தமான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் என்ற பகுதியில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் வகையில் என்னால் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வு சான்றுகள் போதியளவானவை மற்றும் பொருத்தமானவை என்பது எனது நம்பிக்கையாகும்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் சம்பந்தமாக முகாமைத்துவத்தினதும் தொடர்புபட்ட நிருவகிக்கின்ற தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க தயாரித்தலும் நியாயமாகச் சமர்ப்பித்தலும் மற்றும் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களற்ற நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு இயலுமான வகையில் தேவையான உள்ளகக் கட்டுப்பாட்டினைத் தீர்மானிப்பது முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

பிரதேச சபையின் நிதி அறிக்கையிடல் நடைமுறை சம்பந்தமான பொறுப்பு, நிருவகிக்கின்ற தரப்பினர்களால் ஏற்றுக் கொள்ளப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் பிரதேச சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு முடியுமான வகையில் சொந்த வருமானங்கள், செலவுகள், சொத்துக்கள்,

பொறுப்புக்கள் என்பன தொடர்பாக முறையான ஏடுகள் மற்றும் அறிக்கைகள் பேணப்படுதல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு சம்பந்தமாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள் மோசடி மற்றும் தவறுகளின் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்கள் அற்றவை என்பதற்கான உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ அல்லது கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் அதன் பொருண்மையான தன்மையானது இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் அமுல்படுத்தப்படுகின்ற பொருளாதார தீர்மானம் தொடர்பான ஏற்படுத்துகின்ற தாக்கத்தின் அடிப்படையில் தங்கியுள்ளது.

இலங்கை கணக்காய்வு நியமத்தின் பிரகாரம் கணக்காய்வின் ஒரு பகுதியாக என்னால் கணக்காய்வின் போது தொழில்சார் வெளிப்படைத்தன்மை மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் நடவடிக்கை எடுக்கப்பட்டது. என்னால் மேலும்:

- வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களினால் ஏற்படும் ஆபத்துக்களை இனங்காண்பற்கும் மதிப்பீடு செய்வதற்குமாக சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடப்பட்டு அமுல்படுத்தப்பட்டன. பிழையாகக் காட்டுவதன் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ்கூற்றுக்களிலிருந்து இடம்பெறுகின்ற தாக்கங்களை விட மோசடிகளால் இடம்பெறுகின்ற தாக்கங்கள் பாரியதாக இருப்பதானது தவறான கூட்டிணைவால், போலி ஆவணங்களைத் தயாரிப்பதனால், வேண்டுமென்றே விட்டுவிடுவதனால், பிழையாகக் காட்டுவதனால் அல்லது உள்ளகக் கட்டுப்பாடுகளைத் தவிர்ப்பதனால் ஆகிய காரணங்களினால் ஏற்படுவதினாலாகும்.
- உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கமல்லாதிருந்தும் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளைத் திட்டமிடும் வகையில் உள்ளகக் கட்டுப்பாடுகள் மீதான அறிவு பெற்றுக் கொள்ளப்பட்டது.

- பயன்படுத்தப்படுகின்ற கணக்கீட்டு கொள்கைகளின் பொருத்தத் தன்மை, கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத்தன்மை, முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளின் வெளிப்படுத்தல்கள் என்பன மதிப்பீடு செய்யப்பட்டன.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களுக்கான அடிப்படையாகக் கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளன எனவும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல் மதிப்பீடு செய்யப்பட்டது.

இயலுமான வகையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருனவற்றை பரீட்சிப்பதற்காக கணக்காய்வு நோக்கெல்லை விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்களைச் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது பிரதேச சபையின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள் நடைமுறைகள், பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாகவும் பேணிச் செல்லப்படுகின்றதா எனவும்,

- உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது பிரதேச சபையினால் வழங்கப்பட்ட ஏனைய பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க பிரதேச சபை செயற்படுகின்றதா எனவும்,

- தனது அதிகாரங்கள், கடமைகள், மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா எனவும்,

- வளங்கள் சிக்கனமாகவும், செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டுள்ளதா எனவும் ஆகும்.

## 1.5 ஏனைய சட்டரீதியான தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தில் கீழே குறிப்பிட்ட தேவைப்பாடுகள் சம்பந்தமாக விசேட ஏற்பாடுகள் உள்ளடக்கப்பட்டன.

(அ) பிரதேச சபையின் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 6(1)(ஈ)(iii) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகளின் பிரகாரம் பிரதேச சபையின் நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்கியுள்ளன.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 6(1)(ஈ)(iv) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட தேவைப்படுகளுக்கு இணங்க முன்னைய ஆண்டின் போது என்னால் மேற்கொள்ளப்பட்ட சிபாரிசுகளானவை சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

## 1.6 நிதிக்கூற்றுக்களை தயாரிப்பது சம்பந்தமான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| (அ) | உள்ளுர் அபிவிருத்தி உதவித் திட்டத்தின் கீழ் மீளாய்வாண்டில் முடிவடைந்த கட்டிடத்தின் இறுதி வேலைகளுக்கான பெறுமதி ரூபா 5,672,645 தொகை நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருக்கவில்லை. | எதிர்வரும் நிதியாண்டுக்கான நிதிக்கூற்றுக்களில் காட்டுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | நிதிக்கூற்றுக்கள் சரியாக தயாரிக்கப்படல் வேண்டும். |
| (ஆ) | மீளாய்வாண்டிற்கான நீதிமன்ற தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம் ரூபா 12,302,808 தொகையினால் குறைத்து நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்தன. | - மேற்படி - | - மேற்படி - |

### 1.6.2 இணக்கம் செய்யப்படாத கட்டுப்பாட்டு கணக்கு

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | சிபாரிசு |
|---|---|---|
| மீளாய்வாண்டின் ஐந்தொகை மற்றும் ஐந்தொகை குறிப்பில் இரண்டு விடயங்களின் ரூபா581,474,742 தொகையான வேறுபாடொன்று காணப்பட்டிருந்தது. | எதிர்வரும் நிதியாண்டில் சரியாக வெளிப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | நிதிக்கூற்றுக்கள் சரியாக தயாரிக்கப்படல் வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2022 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் வருமானங்களை மிகைத்த மீண்டுவரும் செலவுகள் ரூபா 18,181,148 ஆக இருந்ததுடன், அதற்கு எதிராக முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவுகளை மிகைத்த வருமானம் ரூபா 14,696,274 ஆகும்.

### 2.2 வருமான நிருவாகம்

#### 2.2.1 மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்காகச் சமர்ப்பிக்கப்பட்ட மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே தரப்படுகின்றன.

| | | 2022 | | | | 2021 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | வருமான மூலம் | மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம் | பட்டியலிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் மொத்த நிலுவை | மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம் | பட்டியலிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் மொத்த நிலுவை |
| | | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| (i) | வீதவரியும் வரியும் | 1,625,000 | 1,625,000 | 750,000 | 875,000 | 1,510,000 | 1,510,000 | - | 1,510,000 |
| (ii) | வாடகை | 18,820,000 | | 7,831,967 | 13,568,608 | 18,870,000 | 15,927,282 | 5,284,716 | 10,642,566 |
| (iii) | உத்தரவுப்பத்திரக் கட்டணம் | 4,910,000 | 2,642,220 | 2,642,220 | 2,267,780 | 4,360,000 | 2,020,150 | 2,020,150 | - |
| (iv) | ஏனைய வருமானம் | 8,705,000 | 5,798,665 | 5,798,665 | 2,906,334 | 6,550,000 | 6,550,000 | 7,927,123 | - |
| (v) | கூட்டுத் தொகை | 34,060,000 | 44,702,566 | 17,022,852 | 19,617,722 | 31,290,000 | 26,007,432 | 15,231,989 | 12,152,566 |

#### 2.2.2 வருமானங்களை சேகரிக்கும் செயலாற்றல்

சபையின் அனைத்து வருமானங்களையும் சேகரிக்கும் செயலாற்றல் தொடர்பான அவதானிப்புக்கள் கீழே தரப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| **(அ)** | **வீதவரியும் வரியும்** | | |
| | பிரதேச சபைகள் சட்டத்தின் 134 ஆம் பிரிவின் பிரகாரம், சபையின் அதிகார பிரதேசத்திற்குட்பட்ட பிரதேசத்தில் காணப்படும் 11,652 வீட்டு மனைகள் மற்றும் 528 வியாபார நிலையங்களின் ஆண்டுப் பெறுமானங்கள் மீது வீதவரி ஒன்றை விதித்து அறவிடுவதற்கு 16 வருடங்களுக்கு மேலாக சபையினால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | வீதவரியினை விதித்து வரி அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | வீதவரி ஒன்றை விதித்து வரி அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| **(ஆ)** | **வாடகை** | | |
| (i) | மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு | எதிர்காலத்தில் இதனை | அறவிட வேண்டிய வருமானங்களை |

| | | | |
|---|---|---|---|
| | அறவிடப்பட வேண்டிய ரூபா 4,287,520 தொகையான சந்தைக் கடையறை வாடகையில் ரூபா 171,520 தொகை 10 ஆண்டு முதல் 20 ஆண்டுகள் வரை நீண்டகலமாக 11 வாடகைதாரர்களிடமிருந்து அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | மிக விரைவாக அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ii) | மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதி வரை குத்தகை வழங்கலிலிருந்து பெறவேண்டிய ரூபா 9,281,088 தொகையினுள் 1995 ஆம் ஆண்டிலிருந்து 2021 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதிக்குரிய நிலுவைகள் ரூபா 5,388,936 தொகை அறவிடப்படாது காணப்பட்டிருந்தது. | நீண்டகாலமாகவுள்ள நிலுவைகளை பதிவழிப்பதற்கும் மற்றும் 2020, 2021 ஆம் நிலுவைகளை அறவிடுவதற்கும் நடவடிக்கை எடுக்கப்படும். | வருமானங்களை மிக விரைவாக அறவிடுவதற்கு அல்லது பதிவழிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| **(இ)** | **முத்திரைக் கட்டணம்**<br>2019 ஆம் ஆண்டு தொடக்கம் 2022 ஆம் ஆண்டு வரைக்குமான பெறவேண்டிய முத்திரைக் கட்டணமானது சபை அனுப்பிய தொகைக்கும் கிழக்கு மாகாண இறைவரித் திணைக்களத்தினால் அனுப்பப்பட்ட தொகைக்கும் இடையிலான வேறுபாடு ரூபா 595,850 தொகை காணப்பட்டிருந்தும், அத் தொகையினை இணக்கம் செய்து பெறவேண்டிய முத்திரைக் கட்டணத்தினை பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | இதற்கான வேறுபாட்டுத் தொகையினை கோரிப் பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | பெறவேண்டிய முத்திரைக் கட்டணத்தினை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

பிரதேச சபை அதிகாரச்சட்டத்தின் 3 ஆம் பிரிவுகளின் கீழ் பொது சுகாதாரம், பொதுப் பாவனைச் சேவைகள், பொது வீதி தொடர்பான விடயங்கள் முறைமைப்படுத்துதல் மற்றும் நிருவகித்தல், பொது மக்களின் நல்வாழ்வு, வசதிகளும் நலன்புரியும் ஆகியன சபையினால் நிறைவேற்றப்பட வேண்டியிருந்த செயற்பாடுகளை நிறைவேற்றுவது தொடர்பாக அவதானிக்கப்பட்ட விடயங்கள் கீழே தரப்படுகின்றன.

### 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மை

| | கணக்காய்வு அவதானிப்புகள் | சபையின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| (அ) | 2015 ஆம் ஆண்டில் தளபாடக் கொள்வனவிற்காக சபை நிதியிலிருந்து வழங்கப்பட்ட ரூபா 1,999,907 தொகையினை உதவி உள்ளூராட்சி ஆணையாளரிடமிருந்து மீளளிப்புச் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | பாதீட்டில் நிதி ஒதுக்கப்பட்டதோடு அத் தொகையினை முடிவுறுத்த தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. | மீளளிப்புச் செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | பொதுச் சந்தையில் காணப்படும் 39 கடையறைகளுக்காக மேற்கொள்ளப்பட்ட ஒப்பந்தப் பத்திரத்தில் வாடகைதாரர்களின் எந்தவிதமான கையொப்பங்களுமின்றி காணப்பட்டிருந்தமையினால் அவ் ஒப்பந்த நிபந்தனைகளின் பிரகாரம், 39 | உரிமையாளர்களிட மிருந்து கையொப்பங்களை பெறுவதற்கும் மற்றும் வாடகை நிலுவையினை அறவிடுவதற்கும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. | நிலுவை வாடகையினை சட்ட நடவடிக்கை மூலம் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | வாடகைதாரர்களிடமிருந்து அறவிட வேண்டிய ரூபா 3,276,000 நிலுவை வாடகையினை சட்ட நடவடிக்கை மூலம் அறவிடுவதற்கு சபையினால் முடியாமலுள்ளன. | | |
| (இ) | சபைக்குச் சொந்தமான வருமானம் உழைக்கக் கூடிய இரண்டு இயந்திரங்கள் மற்றும் கனரக வாகனமொன்றும் 1 தொடக்கம் 6 வருடங்கள் திருத்தம் செய்யப்படாமல் விளைவற்றுக் காணப்பட்டிருந்து. | இவ் இயங்திரங்களினை திருத்தம் செய்து வருமானம் உழைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | திருத்தம் செய்து மீளப் பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஈ) | ஆறு வருடங்களுக்கு மேலாக விளைவற்றுக் காணப்படும் ரூபா 925,064 கூட்டுப் பெறுமதிகளினைக் கொண்ட 03 வங்கி நடைமுறைக் கணக்கு மீதிகளினை வருமானம் உழைக்கும் மூலங்களில் ஈடுபடுத்துவதற்கு சபையினால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | பயன்படுத்தப்படாத வங்கி மீதிகளினை உரிய நடைமுறைகளினைப் பின்பற்றி வருமானம் உழைக்கக் கூடிய மூலங்களில் ஈடுபடுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | வருமானம் உழைக்கும் மூலங்களில் ஈடுபடுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (உ) | மீளாய்வாண்டில் உள்ளூராட்சி திணைக்களம், உள்ளுராட்சி உதவி ஆணையாளர் காரியாலயம் ஆகியவற்றிடமிருந்து நன்கொடையாக கிடைக்கப்பெற்ற 27 பொருட்களின் பெறுமதிகள் கணிப்பிட்டு கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | எதிர்வரும் நிதியாண்டில் பெறுமதிகள் கணிப்பிட்டு நிதிக்கூற்றுக்களில் காட்டுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | நிதிக்கூற்றுக்கள் சரியாக தயாரிக்கப்படல் வேண்டும். |

## 3.2 பயன்படுத்தப்படாத சொத்துக்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | சிபார்சு |
|---|---|---|
| மீளாய்வாண்டில் சபையின் பொத்துவில் பொதுச் சந்தைக் கட்டிடத் தொகுதியின் மேல்தளத்திலுள்ள 16 எண்ணிக்கையான கடையறைகளினை பூரணப்படுத்தி வாடகைக்கு வழங்குவதற்கு சபையினால் முறையான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | இக் கடையறைகளினை முழுமையாக பூரணப்படுத்தி அவற்றினை வாடகைக்கு வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | கடையறைகளினை மிக விரைவாக பூரணப்படுத்தி வாடகைக்கு வழங்குவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 3.3 சொத்துக்கள் முகாமைத்துவம்

| | கணக்காய்வு அவதானிப்புகள் | சபையின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| (அ) | சபைக்குச் சொந்தமானதும் மற்றும் சபையினால் பயன்படுத்தப்பட்டு வரும் 264 காணி, கட்டிடங்கள் மற்றும் 42 வாகனங்களின் பெறுமதிகள் மீளாய்வாண்டின் இறுதி வரைக்கும் மதிப்பிடப்பட்டு கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | எதிர்வரும் காலங்களில் உரிமைப் பத்திரம் பெற்றுக் கொள்ளப்பட்டு அதனை கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | மீள்மதிப்பிட்டு அதன் உண்மைப் பெறுமதியை கணக்கீடு செய்ய நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | சபைக்குச் சொந்தமான 20 வாகனங்களினை திருத்தம்செய்து மீளப்பயன்படுத்துவதற்கு அல்லது அதனை ஏலத்தில் விற்பனை செய்வதற்கு சபையினால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | சபை நிதியினைப் பயன்படுத்தி திருத்தம் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | திருத்தம செய்து மீளப் பயன்படுத்துவதற்கு அல்லது அதனை ஏலத்தில் விற்பனை செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (இ) | சபையினால் பயன்படுத்தப்பட்டு வரும் 11 வாகனங்களின் உரிமையினை சபையின் பெயருக்கு மாற்றிக்கொள்வதற்கு கணக்காய்வுத் திகதி வரைக்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | உரிமை மாற்றம் செய்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும். | வாகனங்களின் உரிமையினை சபையின் பெயருக்கு மாற்றிக் கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஈ) | சர்வதேச தொண்டு நிறுவனமொன்றினால் 2013 ஆம் ஆண்டில் சபைக்கு கையளிக்கப்பட்டிருந்த டபிள் கெப் வாகனத்தின் உரிமை மாற்றத்திற்கான வரியினை செலுத்தி சபையின் பெயருக்கு மாற்றிக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படாமையினால், இக் குறித்த வாகனத்திற்கு பூரண வாகன காப்புறுதியினை சபையினால் பெற்றுக்கொள் முடியாமல் இருந்தது. இதனால் இக் குறிப்பிட்ட வாகனம் மீளாய்வாண்டில் விபத்துக்குள்ளாகி இருந்தமையினால் ரூபா235,000 தொகை சபை நிதியிலிருந்து திருத்தத்திற்காக செலவிடவேண்டி ஏற்பட்டிருந்தது. | எதிர்காலத்தில் வாகன உரிமை மாற்றத்திற்கான வரியினை செலுத்தி சபையின் பெயருக்கு மாற்றிக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | உரிமை மாற்றத்திற்கான வரியினை செலுத்தி சபையின் பெயருக்கு மாற்றிக் கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 3.4 பெறுகை முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | சிபார்சு |
|---|---|---|
| தேசிய பெறுகை வழிகாட்டியின் பிரிவு 4.2.1 இன் பிரகாரம் மற்றும் தேசிய பாதீட்டு திணைக்களத்தின் 2006 மார்ச் 24 ஆம் திகதிய 128 ஆம் இலக்க சுற்றறிக்கையின் பிரகாரம், மீளாய்வாண்டிற்கான பெறுகைகள் திட்டமானது சபையினால் வழங்கல்கள் மற்றும் சேவைகள் செயற்பாடுகளுக்காக தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | இனிவரும் காலங்களில் பெறுகைத் திட்டங்களினூடாக ஒரே தடவையில் கொள்வனவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | பெறுகைத் திட்டம் தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 3.5 மனித வளங்கள் முகாமைத்துவம்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| (அ) | சபையில் 16 ஊழியர்கள் வெற்றிடமாகவும் 02 ஊழியர்கள் மேலதிகமாகவும் காணப்பட்டிருந்தும், அவ் ஊழியர்களை வருடாந்த இடமாற்ற நடைமுறையின் கீழ் இணக்கம் செய்வதற்கு சபையினால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | இனிவரும் காலங்களில் இதனை சீர் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | வருடாந்த இடமாற்ற நடைமுறையினை இணக்கம் செய்வதற்கும் மற்றும் வெற்றிடங்களை நிரப்புவதற்கும் |

| | | | |
|---|---|---|---|
| | மேலும், சபையில் வெற்றிடமாக காணப்பட்ட பதவியினர்களுக்கு பதிலாக 180 நாள் வேலைத்திட்டத்தில் உள்வாங்கப்பட்ட 12 ஊழியர்கள் காணப்பட்டிருந்தும், சபையினால் மேலதிகமாக அமைய அடிப்படையில் சபை நிதியிலிருந்து செலுத்துவதற்கு 52 ஊழியர்கள் நியமிக்கப்பட்டு அவர்களுக்கு வருடாந்தம் ரூபா 12,435,835 தொகை செலவிடப்பட்டிருந்தன. | | நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | சேவையிலிருந்து இடைவிலகிய, மரணித்த, இடமாற்றம் பெற்றுச் சென்ற 19 உத்தியோகத்தர்கள் மற்றும் 05 சேவையிலிருந்து இடைவிலகிய தற்காலிக ஊழியர்களிடமிருந்து ரூபா 1,254,609 கடன் நிலுவைத் தொகையை அறவிடுவதற்கு சபை உரிய நடவடிக்கை எடுக்கவில்லை. | அறவிட வேண்டிய கடன் நிலுவையினை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | கடன் நிலுவையினை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

**3.6 வாகனங்களின் பயன்பாடு**

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | சிபார்சு |
|---|---|---|
| சபையினால் பயன்படுத்தப்படுகின்ற 20 வாகனங்களுக்கான வருடாந்த அனுமதிப்பத்திரம் மற்றும் காப்புறுதிப்பத்திரம் என்பவற்றை பெற்றுக் கொள்வதற்கு சபையினால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | எதிர்வரும் நிதியாண்டில் வருடாந்த அனுமதிப் பத்திரம் மற்றும் காப்புறுதி அனுமதிப் பத்திரம் பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும். | வருடாந்த அனுமதிப் பத்திரம் மற்றும் காப்புறுதிப் பத்திரம் என்பவற்றை பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

**4. கணக்களிப்பொறுப்பும் நல்லாட்சியும்**

**4.1 திண்மக்கழிவு முகாமைத்துவம்**

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | சிபார்சு |
|---|---|---|
| சபையின் அதிகார பிரதேசத்தில் காணப்படும் திண்மக்கழிவுகளை கொண்டு சேதனப் பசளை தயாரிப்பதற்கு தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு கிழக்கு மாகாண உள்ளுராட்சி திணைக்களத்தினால் ஒதுக்கப்பட்ட நிதியேற்பாட்டில் ரூபா 499,880 தொகை மூலப்பொருட்களினை கொள்வனவு செய்வதற்காக செலவு செய்யப்பட்டிருந்தும், உற்பத்தி செய்யப்பட்ட சேதனப் பசளைகள் முறையாக பொதி செய்யப்பட்டு விற்பனைக்கேற்ற முறையில் பராமரிக்கப்படாமல் நிலையத்தில் கைவிடப்பட்டு காணப்பட்டிருந்தது. | எதிர்காலத்தில் முறையாக பொதி செய்து விற்பனைக்கு ஏற்ற முறையில் பராமரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | உற்பத்தி செய்யப்பட்ட சேதனப் பசளைகள் முறையாக பொதி செய்யப்பட்டு விற்பனைக்கு ஏற்ற முறையில் பராமரிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

**4.2 சுற்றாடல் பிரச்சினை**

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | சிபார்சு |
|---|---|---|

| | | |
|---|---|---|
| கடந்த காலங்களில் சுற்றாடல் அனுமதிப் பத்திரம் பெற்றுக் கொள்ளப்பட்டிருந்த 156 தொழில் நிறுவனங்களில் 46 தொழில் நிறுவனங்களின் காலாவதியான அனுமதிப் பத்திரங்களினை புதுப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | காலாவதியான அனுமதிப் பத்திரங்களை புதுப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | பதிவேடுகளை பேணி சுற்றாடல் அனுமதிப் பத்திரங்களை வழங்குவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |